முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான்

**எதிர்காலம் குறித்த**

**இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த**

**மகான் அகத்தியர் அருளிய வார ஆசி நூல்**

**பிலவ வருடம் மார்கழி மாதம் 25ம் திகதி முதல் தை மாதம் 3ம் திகதி வரை**

**(09.01.2022 ஞாயிறு முதல் 16.01.2022 ஞாயிறு வரை)**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. ஞானத்தலைவனே ஆறுமுகா
   ஞானதேசிகனாக வந்தருளி
   ஞானபூமி இந்தியா தமிழகத்தின்
   நடப்பாக வருங்கால பலன்குறித்து கேட்க
2. கேட்கவே பிலவசிலைதிங்கள் இருபானை திகதிமேல்
   குறைவிலா கலைதிங்கள் சூலதிகதிவரை
   திட்டமுடன் நடக்கும் வருங்கால பலனாக
   தெரிவிப்பேன் அகத்தியனும் வாரஆசி தன்னை
3. தன்னிலே நீர் நிலவளம் தானும்
   தமிழகம் இந்தியா தன்னில்இருக்க
   மண்ணை காக்கும் கழனிக்கு
   மகத்துவம் பெருக வளர்ச்சித்திட்டம்
4. திட்டங்கள் வகுத்துமே ஆளுமை
   திறம்பட செயல்பாடு காண
   கட்டங்கள் பொருளாதார வழி
   காணும் நிலை அகன்றுமேவும்
5. மேவுமே வறுமைத் துன்பம்
   மேன்மை பலம் தரவல்ல
   புவியின் கோட்டங்கள் மேல்
   புதுமையென குறுக்கீடு செய்து
6. செய்துமே இறைவனுக்கு உண்டான
   சேவை கைங்கரிய செயல்கள்
   அய்யமுற தடையோ அவமதிப்போ
   ஆளுமை வழிகாண நேர்ந்தால்
7. நேர்ந்தால் அரசுக்கு மக்களுக்கு
   நெருக்கடி பேரிடராக வந்துமே
   நேர்ந்திடும் உயிர்பலி துன்பம்
   நிதி நீதிநிர்வாகம் யாவும்கெடும்
8. கெடுதியான குற்றச் செயல்களும்
   குறைபட அரசுமேல் பலியாக
   நாடெங்கிலும் மலிந்து சிக்கல்
   ஞானமிலா நன்மையிலா வளரக்கூடும்

9. கூடாத சிறுமைகளை நீக்கி
கோட்டங்கள் பேதம் இல்லா
நடைமுறைகள் இயல்பாக்கப்பட்டு
ஞானிகள் அவதார யோகிகள் எல்லாம்

10. எல்லாம் போற்றப்பட்டு வர
ஏழாம்படைவீட்டு ஞானி அரங்கன்
வல்லமை அறிந்து வருகவே
வளமுறும் பாதுகாப்பும்பெறும் இந்தியா தமிழகம்
வார ஆசி முற்றே

–சுபம்–

மகான் அகத்திய மகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம் :

பிலவ வருடம் மார்கழி மாதம் 25ம் நாள் 09.01.2022 ஞாயிற்றுக் கிழமை முதல் தை மாதம் 3ம் நாள் 16.01.2022 ஞாயிற்றுக் கிழமை முடிய உள்ள நிகழ்வுகள் :

ஞானமே வடிவாகிய ஞானத்தலைவன் முருகப்பெருமானின் அம்சமாக ஞானதேசிகனாக ஓங்காரக்குடிலாசானாக அவதரித்து தர்மத்தின் வழிதனிலே வழிநடத்துகின்ற அரங்கமகா தேசிகனார் இந்தியா தமிழகத்தின் எதிர்காலம் குறித்து அகத்திய மகரிஷி எம்மிடம் வேண்டுகோள் வைத்திட அகத்திய மகரிஷி யானும் இந்தியா தமிழகத்தில் பிலவ வருடம் மார்கழி மாதம் 25ம் நாள் 09.01.2022 ஞாயிற்றுக் கிழமை முதல் தை மாதம் 3ம் நாள் 16.01.2022 ஞாயிற்றுக் கிழமை முடிய உள்ள காலத்தில் நடக்கவிருக்கும் நிகழ்வுகளை வார ஆசி நூலாக உரைக்கின்றேன் என்கிறார் மகான் அகத்திய மகரிஷி.

இந்தியா தமிழகத்தில் நீர் வளமும் நிலவளமும் இருந்த போதும் இவ்வுலகின் மனிதர்களை உலக உயிர்களை உணவளித்து காக்கின்ற விவசாயத்தினை காக்கும் விதமாக விவசாயம் பெருகிடும் படியாக வளர்ச்சி திட்டங்களை அரசு வகுத்து செயல்பட வேண்டும். அவ்விதமே நிலவளம் நீர்வளம் பேணி விவசாயம் பெருகினால் நாட்டை சூழ்ந்துள்ள கஷ்டங்களும், பொருளாதார சிக்கல்களும் படிப்படியாக நீங்கிவிடும் நாட்டினில் உணவு பற்றாக்குறை உருவாகாது வறுமை ஒழியும்.

மக்களின் நம்பிக்கையான கடவுள் பக்தியினை பாதிக்கும் விதமாகவோ நவீன செயல்பாடுகள் என்ற வகையிலோ ஆலயங்களுக்கோ வழிபாட்டு தலங்களையோ, அதன் வழிபாடுகளிலோ தடைசெய்வதோ குறுக்கீடு செய்வதையோ ஆட்சி புரிவோர் செய்து கடவுள் நம்பிக்கையை அவமதிப்பு செய்திட்டால் மக்களுக்கு நெருக்கடி உண்டாகும். இயற்கையின் செயல்பாடாய் இயற்கை பேரிடர்கள் உண்டாகக்கூடும் இயற்கை பேரிடர்களால் உயிர்பலிகளும் உண்டாகலாம்.

நிதி நிர்வாகம் மற்றும் நீதி நிர்வாக சீர்கேடுகளும் உருவாக வாய்ப்புண்டாகும். அரசின் செயல்பாடுகளில் குறைபாடு உண்டாகி நாடெங்கிலும் உயிர்பலி துன்பங்கள் அதிகமாகும் குற்றச் செயல்கள் நாடெங்கிலும் அதிகரிக்கும் நாட்டினில் பக்தி குறைந்து அஞ்ஞான நிலை உருவாகக்கூடும்.

ஆகவே சிறுமையான செயல்களை நீக்கி மதபாகுபாடு இல்லாமல் எல்லா மதத்தினரையும் மதிப்புடன் நடத்தி மக்களின் நம்பிக்கைக்கும் கடவுள் நம்பிக்கைக்கும் குறைவராமல் பாதுகாத்து இயல்பாக செயல்படுவதோடு ஞானிகளை அவதாரங்களை, கடவுள் அம்சங்களை போற்றி பாதுகாத்திட வேண்டும். ஏழாம்படைவீடு ஓங்காரக்குடில் ஆசான் அரங்க மகா தேசிகரின் தர்மவழி

ஏற்று தர்மவழி நடந்திட நாடும் நாட்டு மக்களும் துன்பமின்றி வாழ்வதோடு அருள் பாதுகாப்பை பெற்று பாதுகாப்பான நல்வாழ்வை பெறுவதோடு வளம்மிக்க நாடாகவும் மாறிடும் எனக் கூறுகிறார் மகான் அகத்திய மகரிஷி.

–சுபம்–